3. தகவல் கோரல்

'மக்கள் குரல்' நாளிதழ் பறிமுதல் செய்யப்பட்டதா என்பது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : I would like to know whether any newspaper, particularly 'Makkal Kural' was seized yesterday.

MR. DEPUTY SPEAKER : That information should be given to the House. It is for the Government to say whether that particular paper was seized yesterday or not. If the Government so pleases, they may furnish the information to the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவசர நிலைக்குப் பிறகு தமிழகத்திலே சில பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. 'மக்கள் குரல்' பத்திரிகை மாத்திரமல்ல—ஆளும் கட்சிச் சார்புடைய பத்திரிகைகள்கூட பல நேரங்களில் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. 'முரசொலி' பத்திரிகைகூட பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆட்சேபகர மான செய்திகள் இருந்தால் பறிமுதல் செய்யப்படுகிறது. அவை களிலே 'மக்கள் குரல்' பத்திரிகையும் ஒன்று.

DR. H. V. HANDE : Sir, whenever a question is raised, a clear answer should be given. Now I want to know whether the State Government are exercising the emergency powers ......

MR. DEPUTY SPEAKER : The Government have already answered this question. We should not go further into the matter.

(4) அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு :—

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/75) 24—10—1975 ஆம் நாளன்று சட்ட மன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.